www.padippakam.com

உ
சிவமயம்



வேலணையைப் பிறப்பிடமாகவும்
பிரான்ஸ் - சார்சேலை
வதிவிடமாகவும் கொண்ட

## அமரர்.
## சபாரட்ணம் சபாலிங்கம்

அவர்களின்
மறைவு குறித்து வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

அமரர்

# சபாரட்ணம் சபாலிங்கம்



**தோற்றம் :**
**14. 01. 1952**

**மறைவு :**
**01. 05. 1994**

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# வாழ்க்கைச்சுருக்கம்

அமரர். சபாலிங்கம் அவர்கள் வேலணையூர் காலம் சென்ற பொட்டர் சபாபதிப்பிள்ளையின் பேரனும், காலம் சென்ற ஆசிரியர் சபாரத்தினம் மகேஸ்வரி தம்பதிகளின் புதல்வரும் ஆவார்.

ஈழமாதீவில் வடபாலில் தமிழும் சைவமும் தழைத்தோங்கும் வேலணையில் ஒப்பிலா மேன்மையுடன் விளங்கிய சுப்பிரமணிய விதானையின் நற்புத்திரன் பொட்டர் சபாபதிப்பிள்ளையின் மகன் சபாரத்தினம் அவர்களதும் யாழ்ப்பாணம் தட்டாதெரு கந்தையா மகேஸ்வரியினதும் மூன்றாவது புத்திரர் இந்த சபாலிங் கம். இவர் காலம் சென்ற சண்முகராசாவின் பெறாமகனும், கந்தையா சாரதாவின் மருமகனுமாவார். இவர் கந்தசாமி எனப்படும் பழைய தமிழரசு பேச்சாளர் புதுமைலோலன், அமரர் ஜெயராசா, யாழ்ப்பாண அரசாங்க உபதலைவர் திரு. கு ணராசா (செங்கை ஆழியான்) வின் மருமகனும் திருமதி. நடராசா யோகரட்ணம், திருமதி. இரத்தினம் தங்கேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் ஆவார்.

இவருடன் உடன்பிறந்தோர் சபானந்தன் (அவுஸ்திரேலியா) சபாநாதன், சபாநேசன், சபாஈசன் (லண்டன்), சற்குணானந் தன் கௌரி, மோகன் வானதி, சுமதி வன்னியசிங்கம் (பி ரான்ஸ்), சபாநிரஞ்சன் (இலங்கை) ஆவார்கள்.

இவர் தனது ஆரம்பக்கல்வியை வேலணை கிழக்கு சரஸ்வதி வித்தியாலயத்திலும், வேலணை மத்திய மகா வித்தியாலயத்தி லும் பயின்றார். பின்னர் யாழ் வண்ணையூர் வைத்தீஸ்வர வித்தியாலயத்திலும் யாழ் இந்துக் கல்லூரியிலும் படித்தார். கட்டுப்பெத்தைப் பல்கலைக் கழகத்தில் (Diploma in chemical engineering) தனது மேற்படிப்பைத் தொடரும் வாய்ப்புக் கிட்டி யது.

படிப்பகம்

www.padippakam.com

அமரர் சபாலிங்கம், படிக்கும் காலத்திலேயே தமிழில் மிகுந்த ஆர்வம் காட்டினார். அது அவர் வேலணையில் இருந்து யாழ் நகர் வந்ததோடு மேலும் மேலும் பெருகியது. புதுமைலோல னின் தமிழரசுக்கட்சி மேடைப் பேச்சுக்களை தவறாது கேட்கத் தொடங்கினார். அவையாவும் இவருடைய தமிழ் ஆர்வத்துக்கு மேலும் தூபமிட அது ஆசையாகிப், பற்றாகி, வெறியாக மாறத் தொடங்கியது. அத்துடன் இளைஞர்பேரவையின் தொடர்பும் ஏற்பட்டது. உணர்ச்சிகள், தமிழர் படும்பாடு, சரித்திர உண் மைகள் என்றுபடித்தவர் இனி தமிழனுக்கு விடிவு வேண்டும் என்றால் ஆயுதப் போராட்டம் தான் என்று சேர்ந்து தீர்மானித் தார்கள். சரித்திர உண்மையான இலங்கைத்தமிழர் போராட்ட வரலாற்றில் அகிம்சைக்கு இடமில்லை எனத் தீர்மானித்தார். அத்துடன் அதற்கான தொடர்புகளும் ஏற்பட்டது. "புத்திஜீவி" என்று அழைக்கப்படும் சபாலிங்கம் அதற்கான ஆயத்தங்களின் முன்னோடியாக சாரணர் இயக்கத்தில் சேர்ந்தார். இராணியின் சாரணன் (Queens Scout) என்ற பட்டத்தையும் பெற்றார். ஒரு போராளி எப்படித் தனது உடம்பை யுத்தத்திற்கு தயார்படுத்து

வாரோ அதே மாதிரி தன்னைஆயத்தம் செய்யத் தொடங்கி னார். அதன் முன்னோடியாக வெறும் தரையில் படுத்துறங்கத் தொடங்கினார். அச்சமயம் ஒருநாள் அவரின் தந்தை "லிங்கம் ஏன் வாங்கிலில் ஒன்றுமில்லாமல் படுத்து இருக்கிறாய்" என்று கேட்டார். அதற்கு அப்போது அவர் "ஐயா இது தான் எனக்கு சுகமாக இருக்கிறது" என்று கூறினார். எமக்கு அப்போது இதற்கு என்ன அர்த்தம் என்று விளங்கவில்லை இன்று தெரிகிறது. இவ்வாறாக அவரின் மேற்படிப்பு முடிந்தது. பரந்தன் இரசாய னத் தொழிற்சாலையில் வேலையும் கிடைத்தது. முன்பு அன் னையிடம் ரியூசனுக்கு என்று பணம் வாங்கிப் போராட்டத்திற்கு செலவழித்தவர் வேலை கிடைத்ததும் சம்பளப் பணத்தில் காவலன் என்ற பத்திரிகையை வெளியிட்டார்.

இச்சமயத்தில் தான் பிரபாகரன் பொலிஸிற்கு தலைமறை வாகி இவருடன் தங்கி இருந்தார். பாலத்திற்கு குண்டு வைக்க முயற்சித்தார் என்ற பெயரில் இவரை திரு. பஸ்தியாம்பிள்ளை கைது செய்தார். அப்போது இவருடைய அன்னைக்கு திரு. பஸ் தியாம்பிள்ளை " இவ்வளவு படித்த குடும்பத்திற்கு இவன் எப்படி வழி தவறிப் போனான்" என்று கூறினார். அது அப் போது.

இலங்கை சிறைகளிலே பலவருடங்கள் சித்திரவதைகளை அநுபவித்தார். அப்போதும் தனக்கு என்று ஒன்றும் கேட்காமல் மற்றவர்களுக்கு அது வேண்டும், இது வேண்டும் அவர்களுக்கு அதைச் செய்யுங்கள் என்று தான் அவரைப் பார்க்க வரும்

படிப்பகம்

www.padippakam.com

அவருடைய சகோதரனிடம் சொல்வார். ஒரு சமயம்அவரின் மூத்த தமையன் பார்க்கப் போனபோது அண்ணா இந்த சேகு வேரா இராஜனின் கஷ்டத்தைப் பற்றி அவனுடைய உறவினர் களுக்கு செய்தி சொல்லி விடுகிறீர்களா? என்று கேட்டார். அப்படியான ஒரு பெருந்தன்மை. சிறிலங்கா சிறையில் கொடுமைகளை, சித்திரவதைகளை அநுபவித்த வெறுப்பில் தற்கொலை முயற்சியில் 5ம் மாடியில் இருந்து கீழே குதித்த போது முதுகு ஒடிந்து குற்றுயிராக ஆஸ்பத்திரியில் சேர்த்தார் கள். தமிழன் என்று பிறந்த குற்றத்திற்காக தமிழ் டாக்டர்கள் இரவு பகலாக நின்று அவரைக் காப்பாற்றினார்கள். அதற்கு மேலாக அவரது மனைவி கோமதி (அச்சமயம் காதலி) யின் பிரார்த்தனைகள் அவரை உயிர் பிழைக்க வைத்தது. அதன் பின்னர் ஒருவாறாக அவரை அரசாங்கம் விடுதலை செய்தது. முதுகு ஒடிந்த பின்பும் சும்மா இருந்தாரா அவருக்கு வெல்லம் பிட்டியாவில் வேலை கிடைத்தது. ஒவ்வொரு வாரமுடிவிலும் யாழ் வருவார். என்ன செய்தாரோ தெரியாது ஆனால் வீட்டில் இருந்தது கிடையாது. ஆனால் அதிர்ஷ்டவசமாக ஒருநாள் அவர் வீட்டில் இருந்தபோது தான் அவருடைய தந்தை கால மானார். அச்சமயம் அங்கு நின்றபடியால் தனது கடமையை நிறைவாகச் செய்தார்.

அதன் பின்னர் 80 ம் ஆண்டு தனது பள்ளிப்பருவக் காதலியான கோமதியை மணம் செய்தார். அதன் பின்னரும் தன்னை இரகசிய பொலிசார் பின்தொடர்வதை உணர்ந்து கொண்டார். இனி இலங்கை வாழ்க்கை முடிந்தது என்று தீர்மானித்து பாரிஸ் பட்டினத்தில் 1981 ம் ஆண்டு தனது வாழ்க்கையை தொடரச் சென்றார். அங்கு சென்று சபாசேயோன் என்ற புத்திரனுக்கு தந்தையாகும் பாக்கியத்தை மனைவி கோமதி மூலம் அடைந் தார். பிரான்ஸிற்கு அகதியாக இடம்பெயர்ந்த பின்னர் சமூகப் பணிகளில் தீவிரமாக ஈடுபட்டார். இயக்கங்களின் ஜனநாயக மற்ற தன்மைகளும், குறுகிய பார்வையும், அரசியல் வறுமையும், ஆயுத மோகமும் இவருக்கு வெறுப்பையும், ஏமாற்றத்தையும் ஊட்டின. இதனால் இயக்க சார்பு அரசியலில் இருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டார்.

இருந்தும், பொதுவாழ்விலிருந்து முற்றுமுழுதாக ஒதுங்கியிருக்க இவரால் முடியவில்லை. எண்பதுகளின் கடைசிப்பகுதியில், ஆசியா நிறுவனம் எனும் வெளியீட்டு நிறுவனம் ஒன்றை நிறுவி, அதனூடு புலம் பெயர்ந்த எழுத்தாளர்களையும், ஈழத்து எழுத் தாளர்களையும் ஊக்குவித்து வந்தார். காலத்தின் தேவையை அறிந்து சிதையுண்டு, சிதறுண்டு கொண்டிருந்த ஈழத்து ஆவ ணங்களை ஆவணப்படுத்துவதிலும் தீவிரமாக, தனது இறுதிக் காலங்களில் உழைத்து வந்தார்.

படிப்பகம்

www.padippakam.com



உ

ஓம் சரவணபவ

# தேவாரதிருப்பதிகங்கள் :

## விநாயகர் ஸ்துதி

பாலுந்தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங்கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ யெனக்கு
சங்கத்தமிழ் மூன்றும் தா.

## சிவபெருமான் ஸ்துதி

### தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப் பொடி பூசியென்
உள்ளங்கவர் கள்வன்.
ஏடுடைய மலரான் உனை நாட்பணிந்
தேத்த அருள் செய்த
பீடுடைய பிரமா புரமேவிய
பெம்மானிவனன்றே.

படிப்பகம்

www.padippakam.com

## திருவாசகம்

அம்மையே யப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த வாரமுதே
பொய்மையே பெருக்கி பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன்றெனக்கு
செம்மையேயாய சிவபத மளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே யுன்னைச்சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந்தருளுவதினியே.

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுவப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோ ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிறன்மணிக் குன்றே
சித்தத் துள் தித்திக்கும் தேனே
அளிவள ருள்ளத் தானந்தக் கனியே
அம்பல மாட ரங் காக
வெளிவளர் தெய்வ கூத்துகந்தாயைத்
தொண்டனே விளம்பு மா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி யழுதிட
பாற் கடல் ஈந்த பிரான்
மாலுக்கு சக்கரம் மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன் னுள்
வாலிக்கு மந்தணர் வாழ்கின்ற
தில்லைச் சிற்றம்பலமே யிடமாக
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

படிப்பகம்

## திருப்புகழ்

துள்ளுமத வேள்கைக் கணையாலே
தொல்லைநெடு நீலக் கடலாலே
மெள்ளவரு சோலைக் குயிலாலே
மெய்யுருகு மானைத் தழு வாயே
தெள்ளுதமிழ் பாடத் தெளிவோனே
செய்ய குமரேசற் திறலோனே
வள்ளல்தொழு ஞானக் கழலோனே
வள்ளி மணவாளப் பெருமானே.

## திருமந்திரம்

ஊரெல்லாம் கூடி ஒலிக்க அழுதிட்டு
பேரினை நீக்கி பிணமென்று பெயரிட்டு
சூரையங் காட்டிடை கொண்டுபோய் சுட்டிட்டு
நீரினில் மூழ்கி நினைப் பொழிந்தார்களே.

## புராணம்

மணியே மணியினொளியே யொளிரு மணிபுனைந்த
அணியே அணியு மணிக்கழகே யருகாதவர்க்கு
பிணியே பிணிக்கு மருந்தே யமரர் பெருவிருந்தே
பணியே னொருவரை நின்பத்மபாதம் பணிந்தபின்னே.

## திருமால் ஸ்தோத்திரம்

பச்சைமா மலைபோல் மேனி
பவளவாய் கமலச் செங்கண்
அச்சுதா ரமரர் ஏறே
ஆயர் தம் கொழுந்தே என்றும்

www.padippakam.com

இச்சுவை தவிர யான் போய்
இந்திரலோக மாளும்
அச்சுவை பெரிதும் வேண்டேன்
அரங்க மா நகருளானே.

## அம்பாள் ஸ்தோத்திரம்

ஆத்தாளை யெங்கள் அபிராம வல்லியை
அண்டமெல்லாம்
பூத்தாளை மாதுளம்பூ நிறத்தாளை
புவியடங்க
காத்தாளை ஐங்கணை பாசாங்குசமும்
கரும்பும் அங்கை
சேர்த்தாளை முக்கண்ணியை தொழுவார்க்
கொரு தீங்கிலையே.

## இலக்குமி ஸ்தோத்திரம்

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின் கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தர்க்கு இளையவளே
மாத்தவளே உனையன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே.

## சரஸ்வதி ஸ்தோத்திரம்

ஆயகலைகள் அறுபத்தி நான்கினையும்
ஏயவுணர்விக்கும் என்னம்மை
தூயவுருப்பளிங்கு போல்வாளென்னுள்ளத்தி னுள்ளே
இருப்ப ளிங்கு வாராதிடர்.

●

படிப்பகம்

www.padippakam.com

●

## அன்னை புலம்பல்

பத்து மாதம் சுமந்து பெற்றேன்
பார் புகழ வாழ்வாயென்று
சித்தமெல்லாம் உன்னுருவைச்
சுமந்தேனே நாளெல்லாம்
எத்தனையோ சுமைகளை - நீ
எவ்வளவு நாள் சுமந்தாலும்
பெற்றமனம் துடிதுடிக்க பேதலித்து நான் கதற
எங்கு நீ சென்றாயோ என்னருமை லிங்கமே !

என் கடன் தீர்ப்பாயென்று உன்னை
நம்பி நான் இருந்தேன்
உன் கடன் தீர்க்கவா உன்னை
நான் சுமந்தேன்
என் கண்ணில் திரையிட்டு ஓலமிட
நீ வைத் தாய்
உன் பிரிவுத்துயரத்தால் மெழுகாக நானுருகி
உன்பதம் சேரவே இறைவனை வேண்டுகிறேன்.

## மனைவி புலம்பல்

சோடிப்புறாவாக சிறகடித்துப்
பறந்தோமே - இன்று
பாடித் திரிந்த என் பதியின் உயிர்
பாதிவழி தன்னில் பறந்ததே
ஓடிப்பறந்தேனே உம்முயிர்தான்
நான் காக்க
வாடி வந்தேனே வழியினிலே உமை இழந்து
ஒற்றைப் புறாவாக.

காலமெல்லாம் துணையாக என்கரம்
பற்றி நின்றீர் - உம்
காலடியில் நான் கிடந்து காப்பாற்றத்
தினம் துடித்தேன்.

படிப்பகம்

www.padippakam.com

கயவர் தான் உமை கவர்ந்து
எனைத் தவிக்க வைத்தாரோ ?
காலம் தான் என் வாழ்வை
கதிகலங்க வைத்ததுவோ !

கண்ணை இமை காப்பது போல்
காத்து வந்தீர் எம்மையெல்லாம் - உம்
தவப்புதல்வன் உமைப்பிரிந்து
கதறியழும் காட்சியினை
காணச் சகிக்காமல்
கற்சிலையாய் நிற்கின்றேன்.
என் காவியமே
எங்கே நீர்
காதவழி சென்றீரோ?

காதலாய் எம்வாழ்வு கற்பனையாய்
பூத்தபோது
வண்ண மலராகி என் வாழ்வில்
வாசனையைத் தந்தீரே
கண்பட்டு என்வாழ்வு
சருகாகிப் போவதற்கா?

வாடா மலரொன்று வான் நோக்கிச்
சென்றுவிட - அதனோடு
வாழ்ந்த மலரொன்று மண்மீது வாடிவிழ
தாங்காத உம்மனம் தான்
தாங்குமோ எமைப்பிரிய
ஓடோடி நீர் வருவீர்
ஒருமுறைதான் எமைக்காண.

## மகன் புலம்பல்

எங்கோ!எந்தாய் ! அன்புடை அப்பா!
இங்கா ரெமக்கு எங்களன் பிதாவே !
மறந்தனீர் பிரிந்தீர்.

அன்னையின் பரிவும் அமையா நீர்மைத்தென்ன
அன்பால் எத்தனை புரிந்தீர்.

படிப்பகம்

www.padippakam.com

மழலை நாளில் மழலை பேசியும் தளர் நடைப்போது தளர் நடை பயின்றும்
மென்மலர்ப் பாயலாய் மார்பினைத் தந்துயாம் துயிலத் தருமிசை பாடியும்
எந்தாய் ! அப்பா! எம்மனோர்ப் புரிந்தீர்.

எத்தனை எது கேட்டாலும் தட்டாமல் தந்து
தந்தையாய், நண்பனாய், தம்பியாய், உடன் பிறந்ததமையனாய் நடந்து
எத்தனை செய்தீர் அப்பா!
யான் இக்கடனை எப்போ எந்தப் பிறப்பில் தீர்ப்பேன்
எத்தனை பிறப்பெடுத்தாலும் யான் உமக்கு மகவாகப் பிறக்க வேண்டும்.

நாம் என்ன பாவம் செய்தோம் வாழும் வயதில்
எத்தனை இன்பங்கள், எத்தனை எதிர்பார்ப்புக்கள்
யான் யாரிடம் கேட்பேன் அப்பா
யாரிடம் கேட்டோம் இழந்தோம் எந்தாய்! அப்பா! என
யான் யாரை அழைப்பேன்! எங்கு போவேன்!

கலையும், மொழியும் கற்று நன்னெறியிலும் உலகுளோர்
நயக்கு மொருவனாய் காண எத்தனை விழைந்தீர்.
இந்நிலத் துன்பம் எத்தனையுண்டு அத்தனையுற்றீர். எத்தனை துன்பங்கள்
எத்தனை சித்திரவதைகள் வந்த போதிலும் அத்தனையும் தாண்டி இங்கு
பாரிஸ் வந்தோம் வாழ, வாழ்ந்தால் இப்படித்தான் வாழ்வேன்
என வாழ்ந்தீர் அப்பா! தலை வணங்குகிறேன்.

வாழ்ந்தது உம்மோடு பத்து வருடங்கள் ஆயினும் அவை பத்து
நூற்றாண்டுகளாகாதா உமது அன்பு, உமது பெருந்தன்மை
உமது ஆற்றல் வர்ணிக்க முடியாது அப்பா!

பிழைத்த எம் வாழ்க்கை புத்துயிர் பெற்றுத் தழைத்திட வருக!
நினைப்போதேனும் சிந்தையின் மறவா தக நெகிழ்ந்துாறி அன்புப்
பெருக்கால் முகமலர் பூப்ப மகனேயென்ன குளியாரலுப்பர் அப்பா வருக
உண்டன வினவியும் உடன் வைத்தூட்டியும் கண்ணிமை போலக்
காப்பதெமையார் அப்பா! வருக! அன்புடைத் தந்தையே வருக ! வருக!

## உடன்பிறப்புக்கள் புலம்பல்

அன்பின் திருவுருவாய் அறிவின் பிறப்பிடமாய்
எங்கள் குலத்துதித்து ஒளிதந்த உடன்பிறப்பே
எம்மோடு வாழ்ந்திட்ட இனிய பல்லாண்டுகளை
மண்ணோடு நீர் கலந்தாலும் மறவோமே இம்மண்மீது.

படிப்பகம்

www.padippakam.com

விண்ணோடு உம்விதி கலந்திட்டாலும்
வீட்டினிலே உம்மொலி இன்றுவரை மாறவில்லை
காட்டினிலே உம்முடல் காற்றோடு கலந்தாலும்
நாட்டினிலே உம்முடல் புகழோடு பொலிகிறதே

அன்பர்கள் நண்பர்கள் ஆயிரம்பேர் நின்றும்
அயலவர் இனத்தவர் அழுது ஓலமிட்டும்
யாம் அனைவரும் மனம்துடித்து ஓலமிட
எமையெல்லாம் பிரிந்து எங்குசென்றீர் எம் உடன்பிறப்பே.

## மைத்துனர்மார் புலம்பல்

உம்பால் நாம் வைத்த உயர்வான
எண்ணங்கள்
எம்மால் என்றென்றும் மறவாத
செல்வங்கள் - எம்மைத்துனரே
துடித்துவிட்டோம் துயர்கொண்டோம்
உம்பிரிவை ஆற்றாமல்
வடித்திட்டோம் கண்ணீர்தான்
நாமெல்லாம் உம்மிழப்பால்
படித்திட்டோம் இவ்வுடம்பு என்றோ
ஓர்நாள் பறக்குமென்று
திடுக்கிட்டோம் உம்பிரிவை
கேட்டதனால் மைத்துனரே.

## நண்பர்கள் புலம்பல்

அன்பனாய், ஆசானாய் நீ வாழ்ந்தாய்
ஆசையாய் நாம் சேர்ந்தோம்
இன்பமாய் இருக்கையில்
ஈடற்ற உன் வாழ்வில்
உன் பிரிவு கேட்டவுடன்
ஊனெல்லாம் உருகி விட்டோம்

படிப்பகம்

www.padippakam.com

என்று மறப்போம் உன் உறவை
ஏங்கித் தவிக்கின்றோம் உன் இழப்பை
ஐயா நீர் எங்கோ மறைந்தாயோ
ஒரு முறைதான் நீ சென்ற இடம் சொல்வாய்
ஓடோடி உன்னிடம் தான் தேடிடுவோம் நாமெல்லாம்.

## தேற்றம்

முடிசார்ந்த மன்னரும் மற்றும் உள்ளோரும் முடிவில் ஒரு
பிடி சாம்பலாய் வெந்து போனதால் இப்புவிதனிலே
குடியாய் இருந்தவரிலையே வெற்று மண் கோட்டை கட்டி
தடியா திருந்திட்டு நல்லறஞ் செய்துய்வோம்.

## திதி நிர்ணய வெண்பா

புண்ணியமாம் துய்ய பவ வருடந்தன்னில்
புனித சித்திரைத்திங்கள் ஞாயிறுவாரம் - அதில்
ஸப்தமி திதியதனில் புனிதன் புத்திஜீவி
சபாலிங்கம் இறைவனடி சேர்ந்தான்.

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

படிப்பகம்

www.padippakam.com

# நன்றி

எம்மிடமிருந்து பலாத்காரமாகப் பறிக்கப்பட்ட எமது அன்புச்சுடரின் துயர் அறிந்து, நேரிலும் தொலைபேசி மூலமும் துன்பத்தில் பங்கு கொண்டவர்களுக்கும், இறுதிக்கிரியைகளின் போது கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மனைவி, மகன்,
சகோதர, சகோதரர்கள்,
உறவினர், நண்பர்கள்.

*3, Alle Paul Leautaud,*
*95200 Sarcelles, France*



கிருஷ்ணா பிரெஸ் பிரான்ஸ். Tél : (1) 42 51 29 92

படிப்பகம்